பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

மூல நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 21

விரிவுரையாளர் வாழ்க்கைக் குறிப்பு / 33

பகுதி 1: அறிமுகம் / 53

1 நான்கு விசயங்களின் கல்வி ஒரு கடமை / 55

2 மூன்று விசயங்களின் செயல்பாடு ஒரு கடமை / 79

3 தவ்ஹீதே அடிப்படை / 99

4 ஷிர்க் அறவே கூடாது / 108

5 மூன்று அடிப்படைகள் / 112

பகுதி 2: முதல் அடிப்படை இறைவனை அறிதல் / 119

1 உங்கள் இறைவன் யார்? / 121

2 படைப்பாளனே வணக்கத்திற்குரியவன் / 129

3 வணக்கங்கள் பல வகை / 133

4 துஆ (பிரார்த்தனை) ஒரு வணக்கம் / 138

5 கவ்ஃப் (பயம்) மற்றும் ரஜா (எதிர்பார்ப்பு) வணக்கங்கள் / 141

6 தவக்குல் (பொறுப்புச் சாட்டல்) ஒரு வணக்கம் / 145

7 ரஃபா (ஆர்வம்), ரஹ்பா (பயம்),
குஷூஃ (பணிவு) வணக்கங்கள் / 148

8 கஷ்யா (பயபக்தி), இனாபா (கீழ்ப்படிந்த நிலையில்
திரும்புதல்) வணக்கங்கள் / 150

9 இஸ்திஆனா (உதவி தேடுதல்), இஸ்திஆதா
(பாதுகாப்புத் தேடுதல்) வணக்கங்கள் / 153

10 இஸ்திஃஆஸா (இரட்சிப்புத் தேடுதல்) ஒரு வணக்கம் / 160

11 தபஹ் (பலியிடுதல்) ஒரு வணக்கம் / 163

12 நத்ர் (நேர்ச்சை) ஒரு வணக்கம் / 166

பகுதி 3: இரண்டாம் அடிப்படை இஸ்லாம் மார்க்கத்தை ஆதாரங்களுடன் அறிதல் / 169

1 இஸ்லாமும் அதன் மூன்று நிலைகளும் / 171

2 மார்க்கத்தின் முதல் நிலை: இஸ்லாம் / 174

3 இரண்டு ஷஹாதாக்களின் விளக்கம் / 176

4 தொழுகை மற்றும் ஸகாத்தின் விளக்கம் / 188

5 நோன்பு மற்றும் ஹஜ்ஜின் விளக்கம் / 190

6 மார்க்கத்தின் இரண்டாம் நிலை: ஈமான் / 193

7 அல்லாஹ்வின்மீதான நம்பிக்கை / 194

8 வானவர்கள்மீதான நம்பிக்கை / 215

9 வேதங்கள் மற்றும் தூதர்களின்மீதான நம்பிக்கை / 222

10 இறுதிநாளின்மீதான நம்பிக்கை / 233

11 விதியின்மீதான நம்பிக்கை / 254

12 மார்க்கத்தின் மூன்றாம் நிலை: இஹ்ஸான் / 268

பகுதி 4: உங்கள் நபி முஹம்மது ﷺ அவர்களை அறிதல் / 277

1 முஹம்மது ﷺ அவர்களின் பிறப்பு / 279

2 முஹம்மது ﷺ அவர்களின் அழைப்பு / 283

3 முஹம்மது ﷺ அவர்களின் மிஅராஜ் பயணம் / 285

4 முஹம்மது ﷺ அவர்களின் ஹிஜ்றத் பயணம் / 291

5 ஹிஜ்றத் ஒரு விளக்கம் / 296

6 மதீனாவில் நபியவர்களின் அழைப்புப்பணி / 313

7 நபியவர்களின் மரணம் / 315

8 நபியவர்களின் மார்க்கம் நிலைத்திருக்கும் / 318

9 அனைவருமே உயிர்ப்பிக்கப்படுவார்கள் / 323

10 அவரவரின் செயல்களுக்கேற்ப கூலி உண்டு / 326

11 மறுமையை நம்பாதவன் நிராகரிப்பாளன் / 329

12 இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டது இதற்குத்தான் / 337

13 தாகூத்துகளைவிட்டு விலகியிருங்கள் / 341

1

நான்கு விசயங்களின் கல்வி ஓரு கடமை

✿

۞ மூலம் ۞

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ اِعْلَمْ رَحِمَكَ اللهُ أَنَّهُ يَجِبُ عَلَيْنَا تَعَلُّمُ أَرْبَعِ مَسَائِلَ: اَلْأُوْلَى: اَلْعِلْمُ: وَهُوَ مَعْرِفَةُ اللهِ، وَمَعْرِفَةُ بِيِّهِ ، وَمَعْرِفَةُ دِيْنِ الإِسْلَامِ بِالْأَدِلَّةِ

பிஸ்மில்லாஹி ரஹ்மானிர் ரஹீம் (بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ) - அள வற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்[2]வின் பெயரால் தொடங்குகிறேன்.[1] அறிந்துகொள்.[2] அல்லாஹ் உனக்கு அருள்புரிவானாக![3] நான்கு விசயங்களை[4] அறிந்து கற்றுக்கொள்வது நம்மீது கடமையாகும்.

1. அல்லாஹ்வையும்[5] அவனது தூதரையும்[6] இஸ்லாமிய மார்க்கத்தையும்[7] ஆதாரங்களுடன்[8] அறிவது.

۞ விளக்கம் ۞

1. பிஸ்மில்லாஹ் கொண்ட தொடக்கம்: இந்நூலை அதன் ஆசிரியர் அல்லாஹ்வின் வேதத்தையும், நபி ﷺ அவர்களின் வழிமுறையையும் பின்பற்றி பிஸ்மில்லாஹ்வைக்கொண்டு தொடங்கியுள்ளார். ஏனெனில், அல்லாஹ்வின் வேதம் பிஸ்மில்லாஹ்வைக்கொண்டுதான் தொடங்கப்பட்டுள்ளது.

2 அல்லாஹ் (ﷻ): படைப்புகள் வணங்குவதற்கும் கீழ்ப்படிவதற்கும் தகுதியான இறைவன் என்று பொருள். ஒவ்வொரு மொழியிலும் இறைவனைக் குறிப்பிடச் சொல்லப்படும் பொதுச்சொல் போல அறபுமொழியிலும் இதை அறபுக் கிறித்துவர்களும் யூதர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். எனினும். உண்மையில் இது வெறுமனே ஓர் அறபுச்சொல் அல்ல. அதையும் தாண்டி இறைவன் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட மிக அழகிய பெயர். அனைத் தையும் படைத்து பரிபாலிக்கும் ஒரே இறைவனை மட்டுமே இது குறிக்கும்.

3

தவ்ஹீதே அடிப்படை

✿

❁ மூலம் ❁

اِعْلَمْ أَرْشَدَكَ اللهُ لِطَاعَتِهِ، أَنَّ الْحَنِيفِيَّةَ مِلَّةَ إِبْرَاهِيمَ: أَنْ تَعْبُدَ اللهَ وَحْدَهُ، مُخْلِصًا لَهُ الدِّينَ.

தனக்குக் கீழ்ப்படிவதற்காக அல்லாஹ் உமக்கு வழிகாட்டு வானாக! அறிந்துகொள்! இப்றாஹீம்[1] ﷺ கடைப்பிடித்த வழியான ஹனீஃபிய்யா'[2] என்பது வணக்கத்தை அல்லாஹ் வுக்கே உரித்தாக்கி[3] அவனை மட்டும் வணங்குவதாகும்.[4]

❁ விளக்கம் ❁

1. இப்றாஹீம் ﷺ சிறப்பு: இப்றாஹீம் ﷺ அவர்கள் அல்லாஹ் வின் உற்ற நண்பர் ஆவார். அல்லாஹ் கூறுகிறான்:

وَاتَّخَذَ اللَّهُ إِبْرَاهِيمَ خَلِيلًا

இப்றாஹீமை தன் உற்ற நண்பராக அல்லாஹ் தேர்ந்தெடுத்துக் கொண்டான். (குர்ஆன் 4:125)

இவர்கள் நபிமார்களின் தந்தையென போற்றப்படுபவர்கள். திருக்குர்ஆனில் அநேக இடங்களில் அவர்களின் வழிமுறை திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. அதனை நாம் பின்பற்ற வேண்டுமென்பதற்காக.

2. ஹனீஃபிய்யா விளக்கம்: 'ஹனீஃபிய்யா' என்பது இணைவைத்தலை விட்டும் விலகி அல்லாஹ்வுக்காகவே எனத் தூய்மையான எண்ணத்துடன் செயல்படக்கூடிய வழியாகும்.

3. அல்லாஹ்வுக்கே வணக்கம்: இக்லாஸ் (الْإِخْلَاصُ) என்றால் தூய்மை என்பதாகும். வணக்கத்தை அல்லாஹ்வுக்கே தூய்மை

1

உங்கள் இறைவன் யார்?

✿

❁ மூலம் ❁

اَلْأَصْلُ الْأَوَّلُ مَعْرِفَةُ الرَّب فَإِذَا قِيلَ لَكَ: مَنْ رَبُّكَ؟ فَقُلْ: رَبِّيَ اللهُ الَّذِي رَبَّانِي، وَرَبَّى جَمِيعَ الْعَالَمِينَ بِنِعَمِهِ، وَهُوَ مَعْبُودِي لَيْسَ لِي مَعْبُودٌ سِوَاهُ؛ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ (الفاتحة: ٢). وَكُلُّ ما سِوَى اللهِ عَالَمٌ، وَأَنَا وَاحِدٌ مِنْ ذَلِكَ الْعَالَمِ.

முதலாவது அடிப்படை இறைவனை அறிவதாகும். 'உன்னுடைய இறைவன் யார்?'[1] என உன்னிடம் கேட்கப்பட்டால் நீ கூறு: 'என்னுடைய இறைவன் அல்லாஹ். அவன்தான் என்னையும் அகில உலகையும் படைத்து, தனது அருட்கொடைகளால் பரிபாலித்து வருபவன்.[2] நான் வணங்குவதும் அவனைத்தான்.[3] அவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் எனக்கு வேறு யாரும் இல்லை. ஆதாரம்:

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

அகில உலகையும் படைத்துப் பரிபாலிக்கக்கூடிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.[4] *(1:1)*

அல்லாஹ்வைத் தவிர அனைத்தும் அகில உலகம் ஆகும்.[5] அதில் நானும் ஒருவனாவேன்.

❁ விளக்கம் ❁

1. அதாவது, உன்னைப் படைத்து, உனக்கு உதவி செய்து, தேவையானவற்றை உனக்குத் தயார்படுத்தி, உனக்கு உணவளித்து வரும் இரட்சகன் யார்?

2. பரிபாலித்தல் என்பது படைப்பினங்களுக்குத் தேவையான அனைத்தையும் தந்து பராமரித்தலாகும். அகிலத்தார் அனை

7

ரஃபா [ஆர்வம்], ரஹ்பா [பயம்], குஷூஃ [பணிவு] வணக்கங்கள்

✿

❁ மூலம் ❁

وَدَلِيلُ الرَّغْبَةِ، وَالرَّهْبَةِ، وَالْخُشُوعِ: قَوْلُهُ تَعَالَى: ﴿إِنَّهُمْ كَانُوا يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَيَدْعُونَنَا رَغَباً وَرَهَباً وَكَانُوا لَنَا خَاشِعِينَ﴾ (الأنبياء: 90).

ஆர்வம்,[1] பயம்,[2] பணிவு[3] ஆகியவற்றிற்கு ஆதாரம், அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّهُمْ كَانُوا يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَيَدْعُونَنَا رَغَبًا وَرَهَبًا وَكَانُوا لَنَا خَاشِعِينَ

நிச்சயமாக இவர்கள் யாவரும் நற்பணிகளை விரைந்து செய்வோராகவும் அச்சத்துடனும் ஆர்வத்துடனும் நம்மிடம் இறைஞ்சுவோராகவும் திகழ்ந்தார்கள். நம் முன் பணிந்தோராகவும் விளங்கினார்கள். (குர்ஆன் *21:90*)[4]

❁ விளக்கம் ❁

1. **ஆர்வம்** (الرَّغْبَةُ)**:** இது பிரியமான ஒன்றை அடைய விரும்புவதற்குச் சொல்லப்படும்.

2. **பயம்** (الرَّهْبَةُ)**:** இந்தச் சொல்லின் கருத்து அச்சமூட்டப்படும் விசயத்திலிருந்து விலக வைக்கின்ற பயம் என்பதாகும். இத்தகைய பயம் செயலுடன் சேர்ந்திருக்கும்.

3. **பணிவு** (الْخُشُوعُ)**:** இது அல்லாஹ்வின் வல்லமைக்குப் பணிவதைக் குறிப்பிடுகிறது. அதாவது, அவனுடைய உலக மற்றும் மார்க்க நியதிகளுக்கு முற்றிலும் கட்டுப்படும் வகையில் பணிவதாகும்.

4. இந்த வசனத்தில் அல்லாஹ் தனது அடியார்களில் உத்தமர்களை 'அவர்கள் அல்லாஹ்வுக்குப் பணிந்தவர்களாக அச்சத்து

1

இஸ்லாமும்
அதன் மூன்று நிலைகளும்

✿

۞ மூலம் ۞

الأَصْلُ الثَّانِي مَعْرِفَةُ دِيْنِ الإِسْلَامِ بِالْأَدِلَّةِ وَهُوَ: اَلْإِسْتِسْلامُ للهِ بِالتَّوْحِيدِ، وَالانْقِيَادُ لَهُ بِالطَّاعَةِ، وَالْبَرَاءَةُ مِنَ الشِّرْكِ وَأَهْلِهِ وَهُوَ ثَلاثُ مَرَاتِبَ: اَلْإِسْلَامُ، وَالإِيْمَانُ، وَالْإِحْسَانُ. وَكُلُّ مَرْتَبَةٍ لَهَا أَرْكَانٌ.

இரண்டாவது அடிப்படை, இஸ்லாமிய மார்க்கத்தை ஆதாரங்களின் மூலம் அறிவதாகும்.[1] இஸ்லாமிய மார்க்கம்[2] என்பது அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதன் மூலம் அவனுக்குப் பணிவதும்[3] அவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம்[4] கட்டுப்படுவதும் இணைவைத்தல் மற்றும் இணை வைப்பவர்களை விட்டும் விலகுவதும்[5] ஆகும். இதற்கு இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் என மூன்று படிநிலைகளும்[6] ஒவ்வொன்றுக்கும் பல அடிப்படைகளும் உள்ளன.[7]

۞ விளக்கம் ۞

1. அதாவது, இஸ்லாமின் மூன்று அடிப்படைகளில் இரண்டா வது அடிப்படையாவது இஸ்லாமிய மார்க்கத்தைத் திருக்குர் ஆன் மற்றும் நபிவழி ஆதாரங்கள் மூலம் அறிவது.

2. இஸ்லாம் அல்லது இஸ்லாமிய மார்க்கம் என்பது அல்லாஹ் வை ஒருமைப்படுத்துவதன் மூலம் அவனுக்குப் பணிவது, அவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் கட்டுப்படுவது, இணை வைத்தல் மற்றும் இணைவைப்பவர்களை விட்டும் விலகுவது ஆகிய மூன்று விசயங்களை உள்ளடக்கியுள்ளது.

1

முஹம்மது ﷺ அவர்களின் பிறப்பு

✿

❁ மூலம் ❁

*الأَصْلُ الثَّالِثُ *مَعْرِفَةُ نَبِيِّكُمْ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ مُحَمَّدُ بْنُ عَبْدِ اللهِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ بْنِ هَاشِمٍ، وَهَاشِمٌ مِنْ قُرَيْشٍ، وَقُرَيْشٌ مِنَ الْعَرَبِ، وَالْعَرَبُ مِنْ ذُرِّيَّةِ إِسْمَاعِيلَ بْنِ إِبْرَاهِيمَ الْخَلِيلِ عَلَيْهِ وَعَلَى نَبِيِّنَا أَفْضَلُ الصَّلاةِ وَالسَّلامِ، وَلَهُ مِنَ الْعُمُرِ ثَلاثٌ وَسِتُّونَ سَنَةً، مِنْهَا أَرْبَعُونَ قَبْلَ النُّبُوَّةِ، وَثَلاثٌ وَعِشْرُونَ فِي النُّبُوَّةِ.

மூன்றாவது அடிப்படை[1] உங்களுடைய நபி முஹம்மது ﷺ அவர்களைப்பற்றி அறிவது. அவர்களது தந்தை அப்துல் லாஹ். பாட்டனார் அப்துல் முத்தலிப். முப்பாட்டனார் ஹாஷிம். ஹாஷிம் குறைஷி குலத்தைச் சேர்ந்தவர். குறைஷிகள் அறபியர் ஆவர். அறபியர் இப்றாஹீம் ﷺ அவர்களின் மகன் இஸ்மாயீல் ﷺ அவர்களின் வழித்தோன்றல்கள் ஆவர். நபி ﷺ அவர்கள் 63 வயது வரை வாழ்ந்தார்கள். நபியாக ஆவதற்கு முன் 40 வருடங்களும், பிறகு நபியாகவும் ரஸூலாகவும் 23 வருடங்களும் வாழ்ந்தார்கள்.

❁ விளக்கம் ❁

1. அதாவது, மனிதன் அவசியம் அறிய வேண்டிய மூன்று அடிப்படைகளில் மூன்றாவது அடிப்படை. மனிதன் தனது இறைவனை அறிவது, தனது மார்க்கத்தை அறிவது, தனது நபியை அறிவது ஆகிய அந்த மூன்று அடிப்படைகளில், முதல் இரண்டு அடிப்படைகள் பற்றிய விளக்கங்களை நாம் முன்னரே கூறிவிட்டோம்.

நபியை அறிவதில் ஐந்து விசயங்கள் உள்ளன.

5

ஹிஜ்றத் ஓரு விளக்கம்

✿

۞ மூலம் ۞

وَالْهِجْرَةُ الانْتِقَالُ مِنْ بَلَدِ الشِّرْكِ إِلَى بَلَدِ الإِسْلامِ وَالْهِجْرَةُ فَرِيضَةٌ عَلَى هَذِهِ الأُمَّةِ مِنْ بَلَدِ الشِّرْكِ إِلَى بلد الإِسْلامِ، وَهِيَ بَاقِيَةٌ إِلَى أَنْ تَقُومَ السَّاعَةُ، وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿إِنَّ الَّذِينَ تَوَفَّاهُمُ الْمَلآئِكَةُ ظَالِمِي أَنْفُسِهِمْ قَالُواْ فِيمَ كُنتُمْ قَالُواْ كُنَّا مُسْتَضْعَفِينَ فِي الأَرْضِ قَالُوَاْ أَلَمْ تَكُنْ أَرْضُ اللّهِ وَاسِعَةً فَتُهَاجِرُواْ فِيهَا فَأُوْلَئِكَ مَأْوَاهُمْ جَهَنَّمُ وَسَآءتْ مَصِيراً * إِلاَّ الْمُسْتَضْعَفِينَ مِنَ الرِّجَالِ وَالنِّسَآءِ وَالْوِلْدَانِ لاَ يَسْتَطِيعُونَ حِيلَةً وَلاَ يَهْتَدُونَ سَبِيلاً * فَأُوْلَئِكَ عَسَى اللّهُ أَن يَعْفُوَ عَنْهُمْ وَكَانَ اللّهُ عَفُوّاً غَفُوراً﴾ (النساء: ٩٧ـ٩٩).

ஹிஜ்றத் - என்றால் இணைவைக்கின்ற நாட்டைத் துறந்து இஸ்லாமிய நாட்டுக்குச் செல்லுதல் என்று பொருள். [1] இது இச்சமுதாயத்தின்மீது கட்டாயக் கடமையாகும்.[2] மறுமைநாள் வரும் வரை இது எஞ்சியிருக்கும்.

ஆதாரம், அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ الَّذِينَ تَوَفَّاهُمُ الْمَلَائِكَةُ ظَالِمِي أَنْفُسِهِمْ قَالُوا فِيمَ كُنْتُمْ قَالُوا كُنَّا مُسْتَضْعَفِينَ فِي الْأَرْضِ قَالُوا أَلَمْ تَكُنْ أَرْضُ اللَّهِ وَاسِعَةً فَتُهَاجِرُوا فِيهَا فَأُولَئِكَ مَأْوَاهُمْ جَهَنَّمُ وَسَاءَتْ مَصِيرًا إِلَّا الْمُسْتَضْعَفِينَ مِنَ الرِّجَالِ وَالنِّسَاءِ وَالْوِلْدَانِ لَا يَسْتَطِيعُونَ حِيلَةً وَلَا يَهْتَدُونَ سَبِيلًا فَأُولَئِكَ عَسَى اللَّهُ أَنْ يَعْفُوَ عَنْهُمْ وَكَانَ اللَّهُ عَفُوًّا غَفُورًا

தமக்குத் தாமே அநீதியிழைத்துக்கொண்டோரின் உயிர் களை வானவர்கள் கைப்பற்றும்போது, 'நீங்கள் எந்த நிலையில் இருந்தீர்கள்?' என்று கேட்பார்கள். அதற்கவர்கள் 'பூமியில் நாங்கள் பலவீனர்களாய் இருந்தோம்' என்று

10

அவரவரின் செயல்களுக்கேற்ப கூலி உண்டு

✿

❁ மூலம் ❁

وَبَعْدَ الْبَعْثِ مُحَاسَبُونَ وَمَجْزِيُّونَ بِأَعْمَالِهِمْ، وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿وَلِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الأَرْضِ لِيَجْزِيَ الَّذِينَ أَسَاؤُوا بِمَا عَمِلُوا وَيَجْزِيَ الَّذِينَ أَحْسَنُوا بِالْحُسْنَى﴾ (النجم: ٣١)

அதன் பிறகு கேள்வி, கணக்குக் கேட்கப்பட்டு அவர்களது செயல்களுக்கு ஏற்பக் கூலி வழங்கப்படுவார்கள். ஆதாரம், அல்லாஹ் கூறுகிறான்:

لِيَجْزِيَ الَّذِينَ أَسَاءُوا بِمَا عَمِلُوا وَيَجْزِيَ الَّذِينَ أَحْسَنُوا بِالْحُسْنَى

தீமை செய்தோருக்கு அவர்களின் செயல்களுக்குரிய பிரதிபலனை அல்லாஹ் கொடுப்பதற்காகவும் நன்மை செய்தோருக்கு நற்கூலியை அவன் வழங்குவதற்காகவும்தான். (குர்ஆன் 53:31)[1]

❁ விளக்கம் ❁

1. அதாவது, மனிதர்கள் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப் பட்ட பிறகு அவர்களின் செயல்களுக்குக் கேள்விக்கணக்குக் கேட்கப்பட்டு அதன்பேரில் கூலி கொடுக்கப்படுவார்கள். அவர்களின் செயல்கள் நல்லவையாக இருந்தால் நற்கூலியும் அவை தீயவையாக இருந்தால் தண்டனையும் கிடைக்கும். அல்லாஹ் கூறுகிறான்:

فَمَنْ يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَرَهُ وَمَنْ يَعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَرَهُ

பிறகு எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அத (ற்குரிய பல)னை அவன் கண்டுகொள்வான். எவன் அணு

13

தாகூத்துகளைவிட்டு விலகியிருங்கள்

✿

❁ மூலம் ❁

وَكُلُّ أُمَّةٍ بَعَثَ اللهُ إِلَيْهَا رَسُولا مِنْ نُوحٍ إِلَى مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَأْمُرُهُمْ بِعِبَادَةِ اللهِ وَحْدَهُ، وَيَنْهَاهُمْ عَنْ عِبَادَةِ الطَّاغُوتِ؛ وَالدَّلِيلُ قَوْلُهُ تَعَالَى: ﴿وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُولاً أَنِ اعْبُدُواْ اللّهَ وَاجْتَنِبُواْ الطَّاغُوتَ﴾ (النحل: ٣٦).

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அல்லாஹ் - நூஹ் ﷺ முதல் முஹம்மது ﷺ அவர்கள் வரை - ஒரு தூதரை அனுப்பியுள்ளான்.[1] அவர்கள் அனைவரும் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும் என மக்களுக்கு ஏவினார்கள்.

தாகூத்துகளை வணங்கக் கூடாதெனத் தடுத்தார்கள். ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான்:

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ

‘அல்லாஹ்வையே வணங்குங்கள் தாகூத்தை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்’ என்று (போதிக்குமாறு) திண்ணமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பினோம். (குர்ஆன் *16:36*)[2]

❁ விளக்கம் ❁

1. ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு தூதரை அல்லாஹ் அனுப்பினான். அத்தூதர் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டுமென மக்களை அழைத்தார். அல்லாஹ்வுக்கு இணை வைப்பதிலிருந்து அவர்களைத் தடுத்தார். ஆதாரம், அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنْ مِنْ أُمَّةٍ إِلَّا خَلَا فِيهَا نَذِيرٌ